# மெட்ரோ ரயில் நிலையத்தில் காட்சி கலைப் போட்டி



உடல் உறுப்பு தானத்தை வலியுறுத்தும் வகையில் சென்னை வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் சனிக்கிழமை நடைபெற்ற காட்சி கலைப் போட்டியில் பங்கேற்ற மாணவர்கள்.

**சென்னை, நவ. 24:** உடல் உறுப்பு தானத்தை வலியுறுத்தும் வகையில், சென்னை வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் காட்சி கலை போட்டி சனிக்கிழமை நடைபெற்றது. இதில், 200-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.

சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம், மோகன் அறக்கட்டளை சார்பில், காட்சி கலைப் போட்டி வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. உடல் உறுப்பு தானம் எனும் கரு அடிப்படையில் 'லைப் 2.0' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தப் போட்டியில், 3 கல்லூரிகள், 12 பள்ளிகளில் இருந்து 200-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். இந்தப் போட்டிக்கு முன்னணி கலைஞர் ரெஜி ஜோசப், டாக்டர் ராஜேஸ்வரி, கலை ஆசிரியர் கிளின்டன் ஆகியோர் நடுவர்களாக இருந்தனர்.

புகைப்படம், ஓவியம், விளக்கப்படம் ஆகிய 3 பிரிவுகளில் முதல் மூன்று இடங்களைப் பிடித்தவர்களுக்கு ரொக்கப்பரிசு, விருது வழங்கப்பட்டது.